**ஜூலை – 06**

# TNPSC துளிகள்

- இத்தாலியின் நப்போலியில் நடைபெற்ற 30-வது உலகப் பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த துப்பாக்கிச் சுடும் வீரர் இளவேனில் வளரிவான் என்பவர் 10 மீ துப்பாக்கி சுடுதல் பிரிவில் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.
    - இளவேனில் இளையோர் உலகக் கோப்பைப் போட்டியில் தங்கப் பதக்கத்தை மூன்று முறை பெற்றுள்ளார்.
- கார்கில் போரில் உயிர் நீத்தவர்கள் மற்றும் போரில் பங்கேற்றவர்களுக்கு கௌரவம், மரியாதை மற்றும் அஞ்சலி செலுத்துவதற்காக கார்கில் போரின் 20-வது ஆண்டு நினைவின் போது இராணுவத்தின் தலைமைத் தளபதி பிபின் ராவத் ஒரு சிறப்பு அஞ்சலிப் பாடல் வெளியிட்டுள்ளார்.
    - இது புகழ்பெற்ற இந்திக் கவிஞரான சமீர் அஞ்சன் என்பவரால் இசையமைக்கப்பட்டு சதாத்ரு கபீர் என்பவரால் பாடப்பட்டது.
- வங்க தேசத்தின் டாக்காவில் உள்ள உலகின் மிகப் பெரிய தீக்காயம் மற்றும் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை மையம் தனது செயல்பாட்டைத் தொடங்கியுள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF - International Monetary Fund) தற்போதையத் தலைவரான கிறிஸ்டினி லகார்டே என்பவர் ஐரோப்பிய மத்திய வங்கிக்கு தலைமை வகிக்கும் முதலாவது பெண்மணியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - 2011 ஆம் ஆண்டில் IMF-ன் தலைவராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண்மணி இவராவார்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது “உன்னுடைய வாடிக்கையாளர்களை அறிந்து கொள்” என்பதற்கான விதிமுறைகள் மற்றும் நடப்புக் கணக்குகளைத் தொடங்குவதற்கான விதிமுறைகள் ஆகியவற்றை சரியாகக் கடைபிடிக்காததற்காக 4 பொதுத் துறை வங்கிகள் மீது 1.75 கோடி அபராதத்தை விதித்துள்ளது.
    - பஞ்சாப் தேசிய வங்கி, அலகாபாத் வங்கி, யூகோ வங்கி மற்றும் கார்ப்பரேஷன் வங்கி ஆகியவை இந்த 4 வங்கிகளாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## சிசோபெரினியா மரபணு

- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கூட்டாக இணைந்து சிசோபெரினியாவுடன் நேரடியாக தொடர்புள்ள ஒரு மரபணுவைக் கண்டறிந்துள்ளனர்.
- குயின்ஸ்லாந்துப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு மற்றும் R. தாரா என்பவரின் தலைமையில் இயங்கும் சென்னையில் உள்ள சீசோபெரினியா ஆராய்ச்சி அமைப்பு ஆகியவை சென்னையில் உள்ள 3000ற்கும் மேற்பட்டவர்களின் மரபணுக்களை ஆய்வு செய்துள்ளன.
- இவர்கள் சிசோபெரினியாவுடன் நேரடியாகத் தொடர்புள்ள “NAPRT1” என்ற ஒரு

மரபணுவைக் கண்டறிந்துள்ளனர்.

- சிசோபெரினியா என்பது ஒரு நபரின் சிந்திக்கும் திறன், உணருதல் மற்றும் நடத்தைகளைப் பாதிக்கக் கூடிய நாள்பட்டவகையிலான ஒரு மன நோயாகும்.

# தேசியச் செய்திகள்

## பிராந்திய மொழிகளில் RRB தேர்வுகள்

- மண்டல ஊரக வங்கிகளின் (Regional Rural Banks - RRB) ஆட்சேர்ப்புத் தேர்வானது ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளுடன் சேர்த்து 13 பிராந்திய மொழிகளிலும் நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தமிழ், அசாமி, வங்க மொழி, குஜராத்தி, கன்னடம், கொங்கணி, மலையாளம், மணிப்பூரி, மராத்தி, ஒடியா, பஞ்சாபி, தெலுங்கு மற்றும் உருது ஆகியவை இந்த 13 மொழிகளாகும்.
- தற்பொழுது நாட்டில் 90 ஆயிரம் வங்கிப் பணியாளர்களுடன் 45 மண்டல ஊரக வங்கிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## வங்க தேச அதிகாரிகளுக்கு முசோரியில் பயிற்சி

- தற்பொழுது பகுதியளவு பணிக் காலத்தை நிறைவு செய்துப் பணியாற்றிக் கொண்டிருக்கும் 1800 வங்க தேச குடிமைப் பணி அதிகாரிகளுக்கு 2019-2025ற்கு இடையிலான கால கட்டத்தில் முசோரியில் உள்ள தேசிய நல்லாட்சி மையத்தில் பயிற்சியளிக்கப்பட உள்ளது.
- 30 குடிமைப் பணி அதிகாரிகளைக் கொண்ட முதல் குழுவானது முசோரியில் 2 வாரம் நடைபெறக் கூடிய பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றது. இக்குழு டாக்காவில் உள்ள இந்திய உயர் ஆணையர் அலுவலத்திற்குச் சென்றுள்ளது.
- இது இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீடு

- சமீபத்தில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீட்டில் 58 பயணப் புள்ளிகளுடன் 86 வது இடத்தில் இந்தியக் கடவுச் சீட்டு தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தப் புள்ளிகள் இந்தியக் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் முன்கூட்டியே வழங்கப்படும் நுழைவு இசைவு இல்லாமல் 58 நாடுகளுக்குச் செல்ல முடியும் என்று கூறுகின்றது.
- இந்தப் பட்டியலில் 189 பயணப் புள்ளிகளுடன் ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் முதலிடத்தில் உள்ளன.

- இந்தத் தரவரிசையானது சர்வதேச விமானப் போக்குவரத்துக் கூட்டமைப்பிலிருந்து (IATA - International Air Transport Association) பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீடானது, தங்களது குடிமக்களுக்கான பயணச் சுதந்திரத்தின்படி நாடுகளை சர்வதேச அளவில் தரவரிசைப் படுத்துவதாகும்.

## பிரான்சினால் முகநூல், கூகுள் ஆகிய நிறுவனங்களுக்கு வரி விதிப்பு

- கூகுள், அமேசான் மற்றும் முகநூல் போன்ற இணையதள நிறுவனங்களின் மீது சிறிய அளவிலான, ஒரு முன்னோடி வரியை விதிக்க பிரான்ஸ் நாடாளுமன்றத்தின் கீழ் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த மசோதாவானது தொழில்நுட்ப பன்னாட்டு நிறுவனங்கள் வரி குறைவான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில், தங்களது தலைமையிடங்களை அமைப்பதன் மூலம் வரி செலுத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்கின்றன. இந்த மசோதா இதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரான்ஸ் போன்ற நாடுகளில் தற்பொழுது அதிக அளவு விற்பனையைக் கொண்டிருக்கும் இந்த நிறுவனங்கள், அந்நாடுகளில் வரி செலுத்துவதில்லை.

## மேற்கு ஆப்பிரிக்காவின் கடற் கொள்ளையர்கள்

- சர்வதேசக் கடல்சார் அமைப்பின்படி (IMB - International Maritime Bureau), 2018 ஆம் ஆண்டில் உலகில் கடற் கொள்ளையர்களால் மிகவும் பாதிக்கப்பட்ட கடலாக மேற்கு ஆப்பிரிக்காவின் கினியா வளைகுடா உள்ளது.
- இந்தப் பகுதியானது 2018 ஆம் ஆண்டில் 72 தாக்குதல்களை எதிர்கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து தற்பொழுது வரை இந்தப் பகுதி 30 தாக்குதல்களைச் சந்தித்துள்ளது.
- 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட IMB ஆனது சர்வதேச வணிகக் கூட்டமைப்பின் (International Chamber of Commerce - ICC) ஒரு சிறப்புத் துறையாகும்.
- இதன் பணி கடல்சார் வர்த்தகம் மற்றும் பயணம் தொடர்பானவற்றில் அதிலும் குறிப்பாக கடற் கொள்ளை தொடர்பானவற்றில் பெருங்குற்றங்களைத் தடுப்பதாகும்.

## UNFAO – சீன நாட்டைச் சேர்ந்த தலைவர்

- சீனாவின் துணை வேளாண் துறை அமைச்சரான குயு டோங்யு என்பவர் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (Food and Agriculture Organization – FAO) பொது இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த அமைப்பிற்குச் சீனாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது தலைவர் இவராவார். இதற்கு முன்பு இப்பதவியில் பிரேசிலைச் சேர்ந்த ஜோஸ் கிராஸியனோ டா சில்வா என்பவர் இருந்தார்.
- இவரது நான்கு ஆண்டுகாலப் பதவிக் காலம் ஆகஸ்டு 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கவிருக்கின்றது.

*FAO*

- FAO என்பது பட்டினியை ஒழிப்பதற்காக சர்வதேச முயற்சிகளுக்கு தலைமையேற்கும் ஐக்கிய நாடுகளின் ஒரு சிறப்பு நிறுவனமாகும்.
- இத்தாலியின் ரோமைத் தலைமையிடமாகக் கொண்ட இது 1945 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- ஏறத்தாழ 11,500 பணியாளர்களுடன் செயல்படும் இந்த அமைப்பு ஐக்கிய நாடுகளின் ஒரு மிகப் பெரிய தொழில்நுட்ப நிறுவனமாகும்.
- FAO ஆனது வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், வனங்கள், மீன்பிடித் தொழில்கள், சிறந்த ஊட்டச்சத்தை உறுதி செய்தல் மற்றும் அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பு போன்றவற்றில் வளரும் நாடுகளுக்கு உதவுகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## ஆதார் மற்றும் பான்

- 2019-20 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையானது ஆதார் தகவலை நிரந்தர கணக்கு எண்ணுடன் (பான் தகவலுடன்) பரிமாற்றிக் கொள்வதற்குப் பரிந்துரைத்துள்ளது.
- இது வருமானவரித் தாக்கல் செய்வதற்குப் பான் அட்டை இல்லாமல் ஆதார் எண்ணைப் பயன்படுத்தி வரித் தாக்கல் செய்ய மக்களை அனுமதிக்கின்றது.
- எந்த இடங்களில் எல்லாம் பான் எண் கேட்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் ஆதார் எண்ணைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தரவின்படி, 42 கோடி பான் அட்டைகளில் 23 கோடி பான் அட்டைகள் மட்டும் ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## மிகப்பெரும் தென் அமெரிக்க கிரகணம்

- 2019 ஆம் ஆண்டின் ஒரே ஒரு முழுமையான சூரிய கிரகணம் தென் அமெரிக்கக் கண்டத்தில் நிகழ்ந்தது.



- நிலவின் இருண்ட நிழல் சூரியனின் பிரகாசமான சூரிய ஒளியை முழுவதுமாக மறைக்கும்போது இந்த முழு சூரிய கிரகணம் நிகழ்கின்றது.
- ஒரு முழு கிரகணத்தின் போது மங்கலான சூரிய ஒளிவட்டம் மட்டுமே தெரிகின்றது. இதுவே முழுமையான கிரகணம் என்று அழைக்கப்படுகின்றது.
- இந்த கிரகணத்தின் முழுப் பாதையானது சிலியின் லா செரீனா நிலப்பரப்பில் தொடங்கி அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸில் முடிவடைந்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச சிறப்புமிகு விருதுகள் 2019

- அமெரிக்கா - இந்தியா உத்திசார் பங்காளர் மன்றமானது (US-India Strategic Partnership Forum - USISPF), தனது 2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேச சிறப்புமிக்க விருதுக்காக மாஸ்டர் கார்டு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி மற்றும் தலைவரான அஜய் பங்கா மற்றும் விப்ரோவின் தலைவரான அசிம் பிரேம்ஜி ஆகியோரைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்தப் புகழ்மிக்க விருதானது அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு இவர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளுக்காக இவர்களுக்கு வழங்கப்படுகின்றது.
- அமெரிக்க அதிபரின் மூத்த ஆலோசகரான ஜாரெட் குஸ்னெர் என்பவர் இச்சந்திப்பு நடைபெறும் போது இந்த விருதுகளை வெற்றியாளர்களுக்கு வழங்கவிருக்கின்றார்.

### *USISPF*

- 2017 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த இலாப நோக்கில்லா அமைப்பானது அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையே இருநாட்டு மற்றும்

உத்திசார் பங்காளர் உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 11 அன்று USISPFவின் 2வது வருடாந்திர தலைமைத்துவ மாநாடானது வாஷிங்டன் D.C யில் நடைபெற இருக்கின்றது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேசக் கூட்டுறவு தினம் – ஜூலை 6

- சர்வதேசக் கூட்டுறவு தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 06 அன்று நிகழக்கூடிய ஒரு வருடாந்திர அனுசரிப்பாகும்.
- இது 1923 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் முதலாவது சனிக் கிழமையன்று முதன் முறையாக அனுசரிக்கப்பட்டது.
- 1995 ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் ஜூலை மாதத்தின் முதலாவது சனிக் கிழமையானது ஐக்கிய நாடுகள் சர்வதேசக் கூட்டுறவு தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த நிகழ்வானது ஐக்கிய நாடுகளினால் அடிக்கோடிட்டு காட்டப்பட்ட முக்கியமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் கூட்டுறவு இயக்கத்தின் பங்களிப்புகளை எடுத்துக் காட்டுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, “நாகரீகமான வேலைக்கான கூட்டுறவு” என்பதாகும.

## உலக விலங்குவழி நோய்கள் தினம் - ஜூலை 06

- ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 06 அன்று உலக விலங்குவழி நோய்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது லூயிஸ் பாஸ்டர் என்பவர் ரேபிஸ் என்ற ஒரு விலங்கு வழி நோய்க்கு எதிரான முதலாவது தடுப்பூசியைக் கண்டுபிடித்த 1885 ஆம் ஆண்டு ஜூலை 6 ஆம் தேதியை அனுசரிக்கின்றது.
- இத்தினம் விலங்கு வழி நோயின் அபாயம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.
- புதிய அல்லது வளர்ந்து வரும் நோய்களில் 75 சதவிகிதம் விலங்குகளில் இருந்து உருவாகின்றன.
- மனிதர்களில் கண்டறியப்பட்ட தொற்று நோய்களில் வெறி நாய்க்கடி, படர்தாமரை மற்றும் சால்மோனல்லா போன்ற 60 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட தொற்றுநோய்கள் விலங்குகளிடமிருந்துப் பரவுகின்றன.

- - - - - - - - - - - - - - -